

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நேற்று (18.10.2026) மாவட்ட அவைத்தலைவர் சி.நரசிம்மன் தலைமையில் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள தலைமை கழக பிரதிநிதிகள் இ.கருணாநிதி, ப.தாயகம் கவி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். டி.எம்.கதிர் ஆனந்த் சிறப்புரையாற்றிட, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட கழகங்கள் மறுசீரமைப்பு குறித்து முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சல்லடையான்பேட்டை கிளைக் கழக இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் மா.கருணாநிதி (எ) நீதி – க.ராஜலட்சுமி தம்பதியர் மேடவாக்கம் டாக்டர் அம்பேத்கர் நகர் சேரன் தெருவில் கட்டியுள்ள புதிய இல்லத்தை முன்னாள் அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் – திருமதி காஞ்சனா சுப்பிரமணியன் ஆகியோர் திறந்து வைத்து வாழ்த்தினர். இவ்விழாவில் சோழிங்கநல்லூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மத்திய பகுதி செயலாளர் எஸ்.அரவிந்த் ரமேஷ், முன்னாள் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மீ.அ. வைதிலிங்கம், சேர்மன் ரவிச்சந்திரன், நடிகர் போஸ் வெங்கட், நடிகர் தாமு, மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் மு.மனோகரன், ஒன்றிய செயலாளர் ஜி. வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எழில் பாண்டியன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் எச்.டி.போஸ், த.மனோநிதி, சித்தாலப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.ரவி, பாலவாக்கம் சோமு, மாமன்ற உறுப்பினர் தமிழரசி சோமு, சிட்லபாக்கம் மனோகரன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் மேடவாக்கம் ஆர். லோகேஸ்வரன், ஒன்றிய கவுன்சிலர் எஸ்.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ், பெரும்பாக்கம் குமார், வட்டச் செயலாளர் மாவட்ட பிரதிநிதி கோ.முருகவேல், ஜல்லடியன்பேட்டை முன்னாள் துணைத் தலைவர் டி.அமித், கவுன்சிலர் கேசவன், ரவி, சி.சரவணன், ரங்கா, ஆட்டோ.சிவா,கார்த்திக், மற்றும் மாவட்ட நிர்வாகிகள். பகுதி, ஒன்றிய, வட்ட அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தலைமை – மாதவரம் எஸ்.சுதர்சனம்! கழக முன்னோடி

செங்குன்றம் டி.நாகலிங்கம் இல்லத் திருமண விழா!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைத்து வாழ்த்துகிறார்!

சென்னை, அக்.19-

கழக முன்னோடி நினைவில் வாழும் செங்குன்றம் டி.நாகலிங்கம் - திருமதி. என்.சரோஜா ஆகியோரின் பெயர்த்தியும், செங்குன்றம் பேரூர்க் கழகப் பொருளாளர் லயன் என்.சந்திர சேகர் - லயன் சி.ராஜேஸ்வரி ஆகியோரின் புதல்வியுமான சி.மணி மேகலை, சென்னை-76, அன்னை நகர் எஸ். கேசவன் - திருமதி. கே.ராணி ஆகியோரின் புதல்வர் கே.ராஜேஸ்குமார் ஆகியோரின் மணவிழாவை 21-10-2026 - புதன்கிழமை காலை 9 மணியளவில் சென்னை - 18, ஆழ்வார் பேட்டை சித்தரஞ்சன் சாலையில் அமைந்துள்ள கழகத் தலைவர் அவர்களின் இல்லத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து வாழ்த்துகிறார்.

இம்மணவிழா வரவேற்பு 21.10.2026 - புதன்கிழமை மாலை 6 மணியளவில் செங்குன்றம் வடகரையில் அமைந்துள்ள அருள் அரசன் பேலஸில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்புக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.





சுதர்சனம் தலைமை வகிக்கிறார்.

லயன் இரா.ஏ.பாபு, செங்குன்றம் ஏ.திராவிட மணி ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஜெ.ஜெய்மதன், ஆர்.டி.சுதாகர், ஜி.ராஜேந்திரன், விப்ர நாராயணன், ஆர்.செல்வமணி, டி.அருள்தேவ நேசன், ஆர்.சீனிவாசன், கே.கபிலன், முனீஸ்வரி சுகுமார், ஆர்.டி.சுரேந்தர், பி.அன்பு, என்.எம்.டி. இளங்கோவன், ஆர்.எம்.பி.குமார், ஜெ.ஜெய்மாறன், பி.நந்தகுமார், கா.கு.இலக்கியன், ஆர். திருமலை, இமானுவேல் சுந்தர் ஜி.பழனிச்சாமி, ஆர்.முத்துராஜா, டி.பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மண விழா வரவேற்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, ஆர்.டி.சேகர், நே.சிற்றரசு, பூச்சி முருகன், துறைமுகம் காஜா, இரா.கிரிராஜன் எம்.பி., ஆ.கிருஷ்ணசாமி, ஜ.பரந்தாமன், டி.ஜெ.கோவிந்தராஜன், காரம்பாக்கம் க.கணபதி, கே.பி.சங்கர், ப.ரங்கநாதன், ஜோசப் சாமுவேல், ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, இ.ஏ.பி.சிவாஜி, ஆர்.டி. மதன்குமார், நா.சேகர், மா.பா.அன்புதுரை, ஜெ.நற்குணநாதன், 'முரசொலி' எம்.முத்தையா, ஜி.கிருஷ்ணராஜா, டி.துரைசிங்கம், ஏ.சி.மோகன், டி. கோபி, எம்.ஜெயபாலன், ஏ.லோகநாதன், கே.என்.குணசேகரன், ஆர். நாகேந்திரன், ஜெ. பால்ராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மண விழாவிற்கு வருகை தரும் அனைவரையும் 118வது வட்டம், மாவட்டப் பிரதிநிதி கே.வேல்முருகன், திருமதி வி.மாலதி, சி.கனிமொழி, சி.குறளோவியன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

அலட்சியம் வெட்ட வெளிச்சமாகி உள்ளது! மழைநீர் தேங்கியது பற்றி

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் விளக்கம் தர வேண்டும்!

முக்கிய ஆவணங்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர் பாபு வலியுறுத்தல்!

சென்னை, அக்.19-

சென்னை மாநகராட்சியைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறையின் அலட்சியமும் வெட்ட வெளிச்சமாகியுள்ளது. தன் சொந்த அலுவலக வளாகத்திலேயே மழைநீர் தேங்கியுள்ளதற்கு ஆணையர் யாரிடம் விளக்கம் கேட்கப் போகிறார்? ஓலைச்சுவடிகள் மற்றும் அரிய ஆவணங்களின் பாதுகாப்பை உடனடியாக உறுதி செய்ய வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவரது சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில், இதைவிடப் பெருமழை பெய்த காலங்களில்கூட இந்து சமய அறநிலையத்துறை



ஆணையர் அலுவலக வளாகத்தில் இவ்வாறு மழைநீர் தேங்கியதில்லை.

சென்னை மாநகராட்சி நிர்வாகம் உறக்கத்தில் இருப்பதாக மக்கள் கேள்வி எழுப்பும் நிலையில், இந்து சமய அறநிலையத்துறையும் அதே அலட்சியப் போக்கில் செயல்படுவது வெட்டவெளிச்சமாக தெரிகிறது.

அனைத்து விவகார நங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி விளக்கம் கேட்கும் ஆணையர், தனது அலுவலக வளாகத்திலேயே மழை நீர் தேங்கியிருப்பதற்கு யாரிடம் விளக்கம் கேட்கப் போகிறார்?

கோயில்களின் நிர்வாகம், சொத்துப் பாதுகாப்பு, பழமையான ஓலைச்சுவடிகள் மற்றும் அரிய ஆவணங்களைப் பாதுகாப்பது எனப் பல முக்கியப் பொறுப்புகளைக் கொண்ட துறையின் அலுவலகத்திலேயே மழை நீர் தேங்குவது கவலைக்குரியது. நீர் உட்புகும் அபாயம் இருந்தால், நூலகங்களிலும் ஓலைச்சுவடிப் பாதுகாப்புப் பெட்டகங்களிலும் உள்ள அரிய ஆவணங்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிப்புகள் வெளியிடப்படும் நிலையில், நடைமுறையில் இத்தகைய நிலை ஏன் ஏற்பட்டது? வடிகால் வசதிகள் முறையாகப் பராமரிக்கப்பட்டனவா? மழை நீர் தேங்குவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா?

அரசியல் சுற்றறிக்கைகளும் மட்டும் நிர்வாகமல்ல; களத்தில் தெரியும் செயல்பாடுகளே நிர்வாகத்தின் அளவுகோல்!

மழைநீர் தேங்கியதற்கான காரணம் என்ன, பொறுப்பான அதிகாரிகள் யார், அரிய ஆவணங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதா என்பவை குறித்து வெளிப்படையான விளக்கம் அளிக்கப்பட வேண்டும். இனியும் இது போன்ற அலட்சியம் நிகழாத வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

சென்னை,அக்.19-

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் 22.10.2026 வியாழன்கிழமை காலை 10.15 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது. முன்னாள் அமைச்சர், கழக தேர்தல் பணிக்குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ, மற்றும் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் கே.கே.கதிர



வன் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

ஆகவே இக்கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1. பசும்பொன் தேவர் திருமகனார் ஜெயந்தி விழா மாண்புமிகு கழக தலைவர், அவர்களின் வருகை.

2. எதிர்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் பிறந்த நாள் விழா.

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.

ஆர்.டி.சேகர் தலைமை! ஐட்ரீம் ஆர்.மூர்த்தி – ஜே.ஜே.எபினேசர் – இரா.செந்தில் குமார் – வ.பெ.சுரேஷ் முன்னிலை!

இராயபுரம் கிழக்கு எம்.தங்கராஜ் இல்ல மணவிழா வரவேற்பு!

ஆர்.எஸ்.பாரதி வாழ்த்து! கலாநிதி வீராசாமி எம்.பி., – டாக்டர் அ.சுபேர்கான் பங்கேற்பு!

சென்னை, அக்.19-

இராயபுரம் கிழக்குப்பகுதி வர்த்தகர் அணி,49 வது வட்டம் எம். தங்கராஜ் - டி.தமிழரசி ஆகியோரின் புதல்வி எம்.டி.நந்தினி - எஸ்.தினேஷ் ஆகியோரின் மணவிழா வரவேற்பு 25.10.2026 - ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6.30 மணிக்கு தண்டையார்பேட்டை, டி.எச். சாலையில் உள்ள ஏ.என். ஆர். திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பிற்கு மாவட்டக்கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் தலைமை வகிக்கிறார்.

ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், இரா. செந்தில்குமார், வ.பெ. சுரேஷ், இரா.லட்சுமணன், எஸ். ஜெபதாஸ்பாண்டியன், வே.சிவகுமார்ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டக் கழகப் பொறுப்பாளர் க.கலைசெல்வன், எல்.சீனிவாசன், எம்.பழனி, எம்.வி.நரசுமணி, அ.குமார், வனிதா, கே.ஆர்.கோபி



நாத், ஜி.கோதண்டராமன், த.கு.பன்னீர்செல்வம், இ.கதிரவன், சுதாகர், கே.பாஸ்கர், சி.ஏ.மகேஷ்குமார், கே.கைலாசம் ஆகியோர் வரவேற்றுபேசுகின்றனர்.

மணமக்களை கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.,டாக்டர் அ.சுபேர்கான் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

மேலும் தா.இளைய அருணா, பி.டி.பாண்டிச் செல்வம், ந.மனோகரன், இரா. மதிவாணன், என். மருதுகணேஷ், இரா. வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக் கண்ணன், மு.கோபி, க. நாகம்மை, வி.தயாளன், சு.சேகர், கி.ராஜேந்திரன், நா.சண்முகம், நேதாஜி கணேசன், கட்டீஸ்,

ப.சோமசுந்தரமூர்த்தி, லயோலா கே.மதன், வெ.சு. சத்யநாராயணன், இர.பொன்இளவரசன், ஏ.டி.மணி, லட்சுமிவேலு, ஒலிஒளி ஆ.பாபு, எஸ்.எம். பரசுராமன், வை.கலைவாணன், வி.வி.ரமேஸ், விமலா மோகன், லியோ டி.சுரேஷ், கார்த்திக், செங்குட்டுவன், பி.செந்தில்குமார்,

த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, காட்டன், சதீஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.என், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், எம்.என்.வெங்கட், கே.லட்சுமணன், ஐ.சி.எப். பழனி, வி.குமார், அத்தோபி.முனுசாமி, எஸ். சுரேஷ், என்.பாரி, எம்.புருஷோத்தமன், கே.பொம்முராஜ், எஸ்.பி.எஸ்.புத்தன் எஸ்.மதியழகன் என்.எழுமலை ஏ.வேணுகோபால் ,சி.லிங்கேசன், கே.என். பார்த்திபன் , எம்.டி.மதன் ராஜ், சி.மனோகரன், எஸ். சந்திரபொம்மு, ட.கிருஷ்ணஹரிஹரன், ஜி.செந்தில்குமார், கே.பாலகிருஷ்ணன், எம்.மோகன் பாபு, ஆர்.பாரதிதாசன், எஸ்.ராஜசேகர், ஜி.விநாயகமூர்த்தி, சேதுராமன், என். அப்துல்மாலிக், ஜி.வினோத் குமார், எஸ்.பொன்னரசன், ஆர்.நரேஷ், என்.சுனில், எம்.அருண்பிரபாகரன்,

எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், சு.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், இரா.பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலாலட்சுமணன், ஜே.கௌரீஸ்வரன், எஸ்.யுவராஜ், எம்.பாலாஜி, எம்.பாலசுப்பிரமணியம், ஏ.அன்வர், எஸ். முகமதுமொய்தீன், ஆர். டி.ஜெய்சங்கர் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மா.நாகராஜன் நன்றி கூறுகிறார்.

மணவிழா வரவேற்பிற்கு வருகை தருவோரை எம். கணேசன், ஜி.கோதண்டராமன், கே.பாலகிருஷ்ணன், ஏ.ஜெயராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மழை வெள்ளப் பணிகள்: த.வெ.க. அரசு வெகு அலட்சியமாக இருந்ததால்

சென்னை மக்கள் பெருந்துயரத்துக்குள்ளாகும் நிலை!

மேயர் பிரியா ராஜன் குற்றச்சாட்டு!

சென்னை, அக்.19

மழை வெள்ளப் பணிகளில் த.வெ.க. அரசு அலட்சியமாகவும், அக்கறையற்ற போக்கிலும் இருந்து வந்ததால்தான், ஒருநாள் மழைக்கே சென்னை மக்கள் பெரும் துயருக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று மேயர் பிரியா ராஜன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேயர் பிரியா ராஜன் குறிப்பிட்டதாவது:-

'எல்லாரும் ஒரே இடத்தில் ஆய்வு செய்து பணி செய்ய வேண்டுமென்று இல்லை. அவர்கள் ஒரு பக்கம் வேலை செய்கிறார்கள். நாங்கள் ஒரு பக்கம் வேலை செய்கிறோம்'. "தவெக அரசு மிகவும் மெதுவாக மழை வெள்ள பணிகளை மேற்கொள்கிறது. வடகிழக்குப் பருவமழைக்கான முன்னேற்பாடுகளையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் ஜூன் மாதத்திலேயே தொடங்கியிருக்க வேண்டும்.

மாநகராட்சியுடன் மழை குறித்த ஆய்வு கூட்டத்தை ஆகஸ்ட்டிலேயே நடத்தியிருக்க வேண்டும். இவர்கள் அந்த ஆய்வுக் கூட்டத்தையே நான்கு நாட்களுக்கு முன் புதான் நடத்தியிருந்தனர். அதிலும் நாங்கள் மக்களின் பாதுகாப்புக்கு தேவையான அடிப்படை விஷயங்களை பேசுகையில் த.வெ.க. எம்.எல்.ஏ. 'போரடிக்குது' என்கிறார்.

அவர்களின் அலட்சிய மான அக்கறையற்ற போக்கு அதிலேயே வெளிப்பட்டது. இந்த அரசு மழைக்காக சில அடிப்படையான பணிகளையே தாமதமாகத் தான் தொடங்கியது. அதைக் குறிப்பிட்டு திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டோம். அதிகாரிகளும் அமைச்சர்களும் மேயர், துணை மேயர் போன்றோரிடம் முறையாக கலந்தாலோசிப்பது இல்லை.

அவர்களாக பணியை மேற்கொள்கிறார்கள். அதனால் அவர்கள் ஒரு பக்கம் பணிகளை ஆய்வு செய்து கூட்டங்களை நடத்துகின்றனர். நாங்கள் இன்னொரு பக்கம் ஆய்வு செய்து பணிகளை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறோம்" என்றார்.

'நேற்று சென்னையில் வரலாறு காணாத அளவுக்கு மழை பெய்திருக்கிறது. ஆனால், காலையில் மக்கள் பெரிய இடையூறுகளின்றி தங்களின் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி விட்டனர். தவெக ஆட்சியமைந்த நான்கு மாதங்களில் மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொண்டு இதை சாதித்தார்களா? தி.மு.க. ஆட்சியில் செய்த பணிகளுக்கான பலன் இப்போது கிடைத்துக் கொண்டிருக்கிறது'.

இவ்வாறு மேயர் பிரியா ராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னைக்கு விடுக்கப்பட்ட 'ரெட் அலர்ட்' வாபஸ்!

சென்னை,அக்.19-

சென்னைக்கு விடுக்கப்பட்ட அதிகன மழைக்கான ரெட் அலர்ட் திரும்பப் (வாபஸ்) பெறப்படுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

சென்னை உள்ளிட்ட வடதமிழக கடலோரத்தில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, கிழக்கு திசை நோக்கி நகர்ந்ததால் வாபஸ் பெறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

எனினும், சென்னையில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் எனவும் வானிலை மையம் எச்சரித்துள்ளது.

தமிழக பகுதிகள் மற்றும் அதையொட்டிய தெற்கு கடலோர ஆந்திர மாநிலப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. கர்நாடக கடலோரப் பகுதிகளுக்கு அருகே உள்ள மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதி களிலிருந்து குமரிக்கடல் பகுதிகள் வரை, ஒரு காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மேலும் பேரிடர் காலங்களில் பொதுமக்களை உடனடியாக உஷார்படுத்தும் நவீன தொழில்நுட்ப முறைப்படி, சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள அனைத்து செல்போன் எண்களுக்கும் எச்சரிக்கை ஒலியுடன் கூடிய அவசரகாலக் குறுஞ் செய்தி அனுப்பப்பட்டிருந்தது.

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் சார்பில் அனுப்பப்பட்ட குறுஞ்செய்தியில், பொது மக்கள் பாதுகாப்பாக இருக்கவும், அதிகாரப்பூர்வ வானிலை அறிவிப்புகள் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டு தல்களைத் தவறாமல் பின்பற்றவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.